தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/


# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST

## ஐபிராத்து (யூப்ரடிஸ்)




## Euphrates






கிறிஸ்துவின் வசனம்
உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்

மரம் 14 ஜூன் 2014 கனி 7

R.N.I.No.TNTAM/2000/3629 Postal
Registration No.DDL/19/2012-2014
Posted at Batlagundu Post office
on 10 th Jun. 2014

Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.

BATLAGUNDU CHURCH OF CHRIST
*MEETS HERE*
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
E-mail: arjunanglory@gmail.com
Website: www.thewordofchristindia.com

To

உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள் - யோவான் 15:18

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

*Our Radio & TV Programs*
SriLanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M &
Tamilan TV
on Monday 6.00 A.M &
Saturday 6.15 P.M

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் டீம் மீட்டிங்





# World Evangelism Gospel Media



**Arjunan in Tamil on Tamilan TV & Radio:**
TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradhana TV:**
Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 p.m on **Rakshana TV:** *(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel. *(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Friday 6.00-6.15 a.m. *(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Sunday 10.00-10.30 p.m and Monday 7.00-7.15 a.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**Sunny, Francis & Vinay David in Hindi on TV:**
Every Tuesday 7.00-7.30 p.m on ShubhSandesh Channel. *(NEW DELHI Contact Mobile: 09810896789)*


**THE WORD OF CHRIST**
Monthly Magazine

திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழ்







**Editor: B.ARJUNAN**

**Associate Editor: S.Reagan**

**Associate Editor: A.Kanagaraj**

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




# வேத அறிவுப் போட்டி எண்: 166

## போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடையை வசன ஆதாரத்துடன் தபால் மூலம் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி எழுதி, அத்துடன் உங்களுக்கு வரும் எங்கள் மாத இதழ் முகவரியில் உள்ள உங்கள் **(Ref.No)** யும் எழுதி அனுப்பவும்.

1. பூமியின் ராஜாக்களுக்கு அதிபதி யார்?
2. நீங்கள் சம்பூரணமாகச் சாப்பிட்டு, திருப்தியடைந்து, உங்களை அதிசயமாய் நடத்திவந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள் என்று எந்த தீர்க்கனைக் கொண்டு கர்த்தர் பேசினார்?
3. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே எதுவும் இருக்கும்?
4. மனுஷருக்குள்ளே இருந்து புறப்படுகிறதே மனுஷனை என்ன செய்யும்?
5. பழைய ஏற்பாடு காலத்தில் ஒப்பாரி பாட அறிந்தவர்களைப் புலம்புகிறதற்கு அழைத்தார்களா?
6. யோனாவின் நாட்களில் சமுத்திரத்தின்மேல் பெருங்காற்றை வரவிட்டவர் யார்?
7. சுத்தமாக்கப்பட்ட 10 குஷ்டரோகிகளில் 9 பேர் தேவ ஜனங்களா?
8. பெத்லகேமின் மறுபெயர் என்ன?
9. பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துகிறவர் எவர்?
10. உங்கள் வாசல்களில் சத்தியத்துக்கும் சமாதானத்துக்கும் ஏற்க நியாயந்தீருங்கள் என்று எந்த தீர்க்கன் மூலம் கர்த்தர் பேசினார்?

## ஐபிராத்து (யூப்ரடிஸ்) Euphrates

- இது மேற்காசியாவில் மிகப்பெரிய நதி
- ஏதேனிலிருந்து பிரிந்து நான்கு ஆறுகளாக ஓடும் நதியில் இது நான்காம் ஆறாக இருந்தது - ஆதி.2:14
- ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் கொடுக்கப்பட்ட தேசத்தில் இந் நதி சொல்லப்பட்டுள்ளது - ஆதி.15:18
- கடல் மட்டத்திலிருந்து 8000 அடி உயரத்தில் இந்நதியின் ஊற்றுகள் புறப்படுகின்றன.
- வெளிப்படுத்தின விசேஷத்திலே இந் நதியைக் குறித்து படிக்கிறோம் - வெளி.9:14



சிறுவர் பகுதி

# சகேயு – Zacchaeus

-K.Mohan

வேத பகுதி: லூக்கா 19:1-10



பிரியமான பிள்ளைகளே, உங்கள் யாவருக்கும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் என் வாழ்த்துக்கள். இன்று நாம் சகேயு என்பவரைப் பற்றிப் பார்ப்போம்.

இவர் ஆயக்காரருக்கு தலைவனும், ஐசுவரியவானுமாய் இருந்தார் என்று மேற்கண்ட வேதபகுதியில் வாசிக்கிறோம். இந்த சகேயு இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகைதேடினான். அவனோ குள்ளமான மனுஷனாக இருந்தபடியால் ஜனக்கூட்டத்தில் அவரைப் பார்க்கமுடியாமல், அவர் போகும் வழியில் முன்னாக ஓடி அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான். அவனுக்குத்தான் எத்தனை அதிகமான வாஞ்சை பார்த்தீர்களா! இயேசு அந்த இடத்தில் வந்தபோது, அண்ணாந்துபார்த்து, அவனைக் கண்டு: சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கிவா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும் என்றார். அவனுக்கோ மிகுந்த மகிழ்ச்சி. நாமோ அவரைப்பார்க்க இந்த காட்டத்திமரத்தில் ஏறினோம் அவரோ என் வீட்டுக்கு வருகிறேன் என்று சொல்லுகிறாரே என்று நினைத்து சந்தோஷத்தோடே அவரை அழைத்துக்கொண்டு வீட்டுக்குப் போனான்.

அவர் சகேயு வீட்டுக்குப்போவதை கண்ட சிலர் முறுமுறுத்தார்கள். இன்று இருக்கிறார்களே அவர்களைப்போல அன்றும், ஆண்டவர் இந்தப் பாவி வீட்டுக்கு தங்கும்படி போகிறார் என்று சொல்லி முறுமுறுத்தார்கள். சகேயுவுக்கோ ஒரே சந்தோஷம். அவன் ஆண்டவரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். அவனுடைய மனந்திரும்புதலைக் கண்ட கர்த்தர் இந்த வீட்டிற்கு இன்றைக்கு இரட்சிப்பு வந்தது இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே என்றார்.

இன்று இந்த சகேயுவைப்போல ஆபிரகாமின் குமாரரும் குமாரத்திகளுமாக நாம் மாற வேண்டுமானால் இவனைப்போல மனந்திரும்பவேண்டும். அவன் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். ஒரு ஆயக்காரன் இந்த அளவு மனமாற்றப்பட்டிருக்கிறான் என்றால் நாம் எந்த அளவுக்கு மாற்றப்படவேண்டும். மாறுங்கள் அப்பொழுது கர்த்தர் நம்முடைய வீட்டிற்கும் இரட்சிப்பைக் கட்டளையிடுவார்.

**மனப்பாட வசனம்:**
**" இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்"- லூக்கா 19:10**



தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 14 ஜூன்-2014 கனி - 7

ஆசிரியருரை

# தேவ வசனம்
## The Word of God



"தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது" என எபிரெயர் புத்தகத்தில் படிக்கிறோம் (எபி.4:12). உலகத்தில் அநேக வார்த்தைகள் இருக்கிறது. அவைகளுக்கெல்லாம் ஜீவன் இல்லை. ஆனால் கர்த்தருடைய வார்த்தைக்கு ஜீவன் இருக்கிறது. அதை எடுத்து ஒரு மனிதனுடைய இருதயத்தில் விதைக்கும்போது அது ஒன்றும், முப்பதும், அறுபதும் நுறுமாகவும் பலன் கொடுக்கிறது என காண்கிறோம். அது எந்தப்பட்டயத்தைக் காட்டிலும் கருக்கானதாகவுமிருக்கிறது. குறிப்பாக இருபுறமும் கருக்குள்ளதாயுமிருக்கிறது. அதை எடுத்து பயன்படுத்தும்போது மிகுந்த கவனத்துடன் பயன்படுத்தவேண்டும். ஏனெனில் அதை எடுத்து பயன்படுத்துகிறவர்களுக்கு நேராகவும் கருக்கு இருக்கிறது, எதிராக இருக்கிறவர்களுக்கு நேரேயும் கருக்கு இருக்கிறது. ஆகையால் இருவரையும் அது வெட்டக்கூடியதாக இருக்கிறது. மேலும் ஆத்துமாவையும் ஆவியையும் கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது என காண்கிறோம். இப்படி வல்லமையுள்ள வார்த்தைகளுக்கு யார் செவிகொடுப்பார்கள்? என நீங்கள் நினைக்கக்கூடும். ஆண்டவர் சொல்லும்போது; "தேவனால் உண்டானவன் தேவனுடைய வசனங்களுக்குச் செவிகொடுக்கிறான்" என்று சொல்லுகிறார் (யோவா.8:47). நீங்கள் தேவனால் உண்டானவர்களாய் இருப்பீர்களானால் தேவனுடைய வசனங்களுக்குச் செவிகொடுப்பீர்கள்.

ஒரு முறை செர்கியுபவுல் என்று சொல்லக்கூடிய ஒரு மனுஷன் பர்னபாவையும் சவுலையும் அழைத்து அவர்களால் கர்த்தருடைய வசனத்தைக் கேட்க ஆசையாயிருந்தான். அங்கு பர்யேசு என்னும் பேர்கொண்ட மாயவித்தைக்காரன் அந்த செர்கியுபவுல் என்று சொல்லக்கூடிய அதிபதியை விசுவாசத்தினின்று திருப்பும்படி வகைதேடி பர்னபாவோடும் பவுலேடும் எதிர்த்துநின்றான். இதைக்கண்ட பவுல் அவனை உற்றுப்பார்த்து "எல்லாக் கபடமும் எல்லாப் பொல்லாங்கும் நிறைந்தவனே, பிசாசின் மகனே, நீதிக்கெல்லாம்

பகைஞனே கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டுவதில் ஓயமாட்டாயோ என்றான்" (அப்.13:10). ஆனால் அந்த செர்கியுபவுல் என்று சொல்லக்கூடிய அதிபதி நடந்தவைகளைக் கண்டு , கர்த்தருடைய உபதேசத்தைக்குறித்து அதிசயப்பட்டு விசுவாசித்தான். அன்பானவர்களே, தேவனால் உண்டானவர்கள் தேவனுடைய வசனங்களுக்குச் செவிகொடுக்கிறார்கள். அதை விசுவாசிக்கவும் செய்கிறார்கள். தேவனால் உண்டாகாதவர்கள் அதாவது மாயவித்தைக்காரனைப்போல உள்ள எலிமாக்கள் கர்த்தருடைய வசனத்திற்கு எப்போதும் எதிர்த்துநிற்பார்கள். ஏனெனில் அவர்கள் பிசாசின் பிள்ளைகள். ஆகையால் பவுல் அந்தப் பர்யேசுவைப் பார்த்து பிசாசின் மகனே, நீதிக்கெல்லாம் பகைஞனே என்று சொல்வதைப் பார்க்கிறோம்.

தேவ வசனத்தை ஒரு மனுஷன் கைக்கொள்ளும்போது அவனிடத்தில் தேவனுடைய அன்பு மெய்யாகவே பூரணப்பட்டிருக்கும் என்று யோவான் அப்போஸ்தலன் சொல்லுகிறார். "அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்; நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதினாலே அறிந்திருக்கிறோம்" (1யோவா.2:5). கிறிஸ்தவர்களை அவர்களுடைய கனிகளினாலே அறியலாம். அதைப்போல வசனத்தை கைக்கொள்ளுகிறவர்களிடத்தில் தேவனுடைய அன்பு இருக்கும். அன்பு இல்லாதவன் தேவனை அறியான். தேவன் அன்பாகவே இருக்கிறார். தேவனை அறிந்தவனிடத்தில் தேவனுடைய அன்பு ஊற்றப்பட்டிருக்கும். சிலர் உதட்டளவில் அன்பு செலுத்துகிறார்கள். சிலர் எழுத்தளவில் அன்பு செலுத்துகிறார்கள். ஆனால் கர்த்தருடைய வசனம் நமக்குப்போதிப்பது என்ன? "என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்" (1யோவா.3:18). கிரியை இல்லாத விசுவாசம் செத்தது. அதைப்போல வசனத்தினாலும் நாவினாலுமல்ல கிரியையினாலும் அன்பு கூரவேண்டும். ஒருவனுக்கு பசியாயிருக்கும்போது நம்மிடத்தில் அவனுடைய தேவையை பூர்த்திசெய்ய பணம் இருந்தும் அவனைநோக்கி குளிர் காய்ந்து பசியாறு என்று சொல்லி அவனுடைய தேவையை பூர்த்திசெய்யாமல் நாவினால் சொல்லி அனுப்பிவிட்டால் அவனுடைய தேவை சந்திக்கப்படுமா? அல்லது உனக்காக நான் ஜெபிக்கிறேன் என்று சொல்லி அனுப்பினால் போதுமா? நாம் நம்முடைய கிரியை மூலம் அன்பை வெளிப்படுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம். திருமண நிகழ்ச்சிகளில் வாழ்க்கை துணையை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆண்கள் அன்பிற்கு அடையாளமாக மோதிரத்தை அல்லது தாலிச் செயின் போன்றவற்றை அணிவிக்கிறார்கள். அதைப்போல நாம் மற்றவர்கள் மீது காட்டுகிற அன்பிற்கு அடையாளமாக கிரியைகள் மூலம் காண்பிக்கவேண்டும். கிரியை என்று பார்க்கும்போது அது நலமானதாக இருக்கவேண்டும். யோவான் இரண்டு நபர்களை நமக்கு அடையாளப்படுத்துகிறார். ஒருவன் காயீன் மற்றொருவன் ஆபேல். இவர்களைப் பற்றி சொல்லும்போது; "பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலைசெய்த காயீனைப்போலிருக்கவேண்டாம்; அவன் எதினிமித்தம் அவனைக் கொலைசெய்தான்? தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததினிமித்தந்தானே" என்கிறார் (1யோவா.3:12). தேவனுடைய அன்பு நம்மில் இருக்குமானால் இவ்விதமாக இருக்கமாட்டோம். காயீன் பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலை செய்தான். யூதாசுக்குள் பிசாசு புகுந்தபடியால் அவன் இயேசுவைக் காட்டிக்கொடுத்தான். ஆகையால் தான் பிசாசுக்கு இடங்கொடாதிருங்கள் என வேதம் எச்சரிக்கிறது. சிறிதளவு இடம் கொடுத்தாலும் அதன் வழியாக பிசாசு வந்து குடிகொண்டு ஆதிக்கம் செய்யத் துவங்கிவிடுவான். அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள் அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான். தேவனுடைய



துன்மார்க்கன் தன் அக்கிரமத்திலே சாவான். ஆனாலும் அவன் இரத்தப் பழியை உன் கையிலே கேட்பேன். துன்மார்க்கன் தன் வழியை விட்டுத் திரும்பாமற்போனால், அவன் தன் அக்கிரமத்திலே சாவான். நீயோ உன் ஆத்துமாவைத் தப்புவித்துக்கொள்ளுவாய்.

அறியாமைக்கு மன்னிப்பில்லை. நாம் துன்மார்க்கனை எச்சரியாமற்போனாலும், அவன் (தன் ஆத்துமாவை) இழந்த நிலையில் தான் இருப்பான்.

நாம் எச்சரிக்காவிட்டால் நாமும் (நம் ஆத்துமா) இழந்த நிலையில்தான் இருப்போம் மற்றவர்களுக்கு நாம் பட்டிருக்கும் கடன் என்பது எவ்வளவு முக்கியமான ஒன்று என்பதை இது காண்பிக்கிறது.

5. இயன்ற எல்லாவற்றையும் நாம் பிறருக்கு செய்து முடித்துவிட்ட நிலையிலும் அது கடனை செலுத்தியதற்கு மேல் எண்ணக்கூடியதாகும்.

"நான் ஆயத்தமாயிருக்கிறேன்" (ரோ.1;15) அவர் முற்றிலும் ஆயத்தமாயிருந்தார் என்னால் இயன்ற மட்டும் என்பது அவருடைய ஆவலைக் காண்பிக்கிறது. ரோமாபுரியிலிருக்கிற உங்களுக்கும் என்னால் இயன்ற மட்டும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க விரும்புகிறேன்.

1. இது ஏதோ அவர் கட்டாயப்படுத்தப்படுவதினால் உள்ள ஓய்வான மனப்பான்மையில் செய்யப்படுவதல்ல. உதாராணமாக பள்ளியில் பரீட்சை எழுதுவதுபோல்.

2. மனுக்குலத்தின் மிகவும் அவசரத் தேவையை சந்திக்க தயாராயிருந்தார் சுவிசேஷத்தை பிரசங்கிக்க.

ஆ. பவுல் கிறிஸ்துவுக்குள் மனமாற்றமடைந்ததினால் இது சாத்தியமாயிற்று.

1.தர்சுப்பட்டணத்து சவுல் என்பதிலிருந்து அப்போஸ்தலனாகிய பவுல், கிறிஸ்துவின் ஊழியக்காரன் என்ற நிலைக்கு மாற்றப்பட்டான்.

2. இரத்தக் காயங்களும், துன்பங்களும் அவருடைய தமஸ்குவிலிருந்து ரோமாபுரிக்குச் சென்ற பயணத்தில் நிறைந்திருந்தது.

எருசலேமில் நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காக கட்டப்படுவதற்கு மாத்திரமல்ல, மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன் என்றான் (அப். 21:13).

3. அவன் (பவுல்) பயத்தினாலோ, ஆத்துமாவைக் குறித்த கவலையின்மையினாலோ, ஆயத்தமின்மையினாலோ தடைசெய்யப்படவில்லை.

1. நான் ஆயத்தமாயிருக்கிறேன் என்பதே கிறிஸ்துவர்களுடைய மனப்பான்மையாய் இருக்கவேண்டும். ஏசாயா சொன்னான்; பின்பு யாரை நான் அனுப்புவேன் யார் நமது காரியமாய் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான் இதோ, அடியேன் இருக்கிறேன் என்னை அனுப்பும் என்றான் (ஏசா.6:8)

2. எருசலேமின் அலங்கங்களை திரும்பக் கட்டும்படி நெகேமியா திரும்பிச் செல்ல ஆயத்தமாயிருந்தான்.


3. நம்முடைய பொறுப்புகளை நாம் சந்திப்பதற்கு தயாராயிருக்க வேண்டும். எப்போதுமே ஆசீர்வாதங்கள் பொறுப்புகளைக் கொடுக்கும்.

## ஜெபியுங்கள்



- நம் இந்திய தேசத்திற்காக...
- சபைகள் சத்தியத்தை அறிகிற அறிவில் வளர்ச்சியடைய...
- உலக அளவில் நடைபெற்று வரும் World Evangelism ஊழியத்திற்காக...
- எதிர்வரும் நாட்களில் நமது மாத இதழ் 5000 பிரதிகளாக வெளிவர...
- நமது மாதஇதழின் ஆசிரியர் சகோ.அர்ஜுனன் அவர்கள் 05.06.2014-ல் தமது 50-வது பிறந்த நாளை காண்கிறார் அவருக்காக...

# பாடம் -7 நான் தானே என்று பவுல் சொல்வது




*- Jerry Bates*

**-மொழியாக்கம் சகோ.தானியேல், சென்னை**

1. சபைக் கூட்டத்திலிருந்து வெளியே வரும் ஒருவரைப் பற்றிய கதையிது. ஒரு நாள் அப்படி வரும்போது; பிரசங்கியார் அவர்களைப் பிடித்து தனியே இழுத்துக் கொண்டுபோய் நீங்கள் கர்த்தருடைய சேனையில் சேர வேண்டுமென்றார். அவர் சொன்னார் நான் முன்னமே அவருடைய சேனையில் இருக்கிறேன் என்று சொன்னார். அப்படி நான் உங்களை கிறிஸ்துமஸ் மற்றும் ஈஸ்டர் தினங்களில் தானே பார்க்கிறேன். அவர் மெதுவாகச் சொன்னார். நான் இரகசியப் பணியில் இருக்கிறேன் என்று.

2. இன்று எத்தனைபேர் கர்த்தரின் இரகசியப் பணியில் உள்ளனர்? உண்மையாகவே அப்படி ஒன்று கிடையாது.

3. நிச்சயமாக பவுல் ஒன்றும் இரகசிய சேவையில் இல்லை. ஒரு குறையும் சொல்லாமல், அதிக பாடுகளை அநுபவித்துக்கொண்டு மிக அதிகமாக எப்படி பவுல் கர்த்தருக்கென்று செயல்படுகிறார் என்று நாம் அடிக்கடி பிரமிப்படைகிறோம். நம்முடைய வேதவாக்கியங்கள் நமக்கு ஏனென்று சொல்லுகிறது விவாதம் (கடனாளி என்பதைக் குறித்து விவாதித்தல்)

1. நான் கடனாளி (ரோம.1;14)

அ. கடனாளி என்று சொன்னால் மற்றவர்களுக்கு ஏதாவது ஒன்றை கொடுக்கவேண்டியவர் என்று பொருள். பொதுவாக பணம் சம்பந்தப்பட்டது.

1. நாம் அனைவரும் நம் சரீரங்களின் செயல்களை ஒடுக்க வேண்டியவர்களாயிருக்கிறோம் (ரோம.8:12).

2. கர்த்தருடைய சிறப்பான அழைப்பினிமித்தம் பவுலுக்கு ஒரு விசேஷித்த கடனிருந்தது. இந்தக் கடனானது தேவனிலுள்ள கடனிலிருந்து வந்தது (ரோம.1:1).

3. சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மை பாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ. நான் உற்சாகமாய் அப்படிச் செய்தால் எனக்குப் பலன் உண்டு; உற்சாகமில்லாதவனாய்ச் செய்தாலும், உக்கிராண உத்தியோகம் எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதே (1கொரி.9:16,17).

4. அவர் கிரேக்கருக்கும் தேவனற்றவர்களுக்கும் கடன்பட்டவராயிருந்தார் (கிரேக்க மற்றும் பிற மொழி பேசுகிற நாகரீகமற்றவர்கள்) கல்வி கற்றவர் மற்றும் கல்லாதோர். எல்லா மனிதர்களிடத்தும் நிறைவேற்றவேண்டிய கடமை அவருக்கிருந்தது. கர்த்தருக்கு நாம் செய்யும் ஊழியத்தின் அடிப்படை இதுவே. கர்த்தருடன் உள்ள நமது உறவு நம்மை எல்லா மனிதருக்கும் கடனாளியாக்குகிறது.

1. 1கொரி.4;1-ல் பவுல் நாமெல்லோரும் தேவனுடைய இரகசியங்களின் சுவிசேஷத்தின் உக்கிராணக்காரர் என்றழைக்கிறார். அடுத்த வசனத்தில் மேலும் உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவசியமென்று பவுல் குறிப்பிடுகிறார்.

2. தன் கடனை நன்கு உணரும்போது சேவை செய்வதற்கான ஆர்வத்தை அது அதிகப்படுத்தும்.

3. அநேகர் உண்மையற்றவர்களாயிருப்பதற்கு காரணம்; தங்களை அவர்கள் கடனாளிகளென்று சொல்ல முடியாததே.

4. தன்னுடைய ஜனங்கள் மற்றவர்களை பாவத்தைக் குறித்து எச்சரிக்க வேண்டியது அவசியமென்று எதிர்பார்க்கிறார். நான் துன்மார்க்கனை நோக்கி துன்மமார்க்கனே, நீ சாகவே சாவாய் என்று சொல்லுகையில் நீ துன்மார்க்கனை துன்மார்க்கத்திலே இராதபடி எச்சரிக்கத்தக்கதாக அவனுக்கு சொல்லாமற் போனால், அந்த



வசனம் உங்களில் தங்க முதலாவது இடம்கொடுங்கள். அப்பொழுது அன்பு உங்களில் குடிகொள்ளும். நீங்கள் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாயிருப்பீர்கள்.

தேவ வசனத்தை நீங்கள் விசுவாசிக்கும்போது அது உங்களுக்குள் பெலன் செய்யும். அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கேய சபையாருக்கு எழுதும்போது இதை தெரியப்படுத்துகிறார். "நீங்கள் தேவ வசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக்கொள்ளாமல், தேவவசனமாகவே ஏற்றுக்கொண்டதினால் நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம்; அது மெய்யாகவே தேவவசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது" (1தெச.2:13). நாம் கர்த்தருடைய வசனத்தை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும்போது அது நமக்குள்ளே பெலன் செய்கிறது. ரயில் நிலையத்தில் வண்டி வரும் நேரத்தை அறிவிக்கிறார்கள். அதைக் கேட்டவர்கள் ஆயத்தமாக இருந்து ரயிலில் பயணம் மேற்கொள்கிறார்கள். அதை அறியாது ஒருவர் தூங்கிவிடுவாரேயானால் ரயில் வந்தது சென்றது தெரியாது. பின்பு விழித்துப்பார்த்து யாரிடமாவது கேட்டால் வண்டி சென்று ஒரு மணிநேரம் ஆகிவிட்டது அல்லது இரண்டு மணிநேரம் ஆகிவிட்டது என்பார்கள். பின்பு அவர் தன்னுடைய பயணத்தை தொடரமுடியாமல் வருத்தத்துடன் வீடு திரும்பவேண்டியிருக்கும். கர்த்தருடைய வசனம் பிரசங்கிக்கப்படும்போது ஒருவர் தூங்குவாரேயானால் அவருடைய நிலைமையும் இப்படித்தானிருக்கும். அதை கவனமாக ஏற்றுக்கொண்டு தன் இருதயத்தில் வைக்கிறவர்கள் நூறத்தனையான ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள். எரேமியா தீர்க்கன் சொல்லும்போது; "உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும் என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது; சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் எனக்குத் தரிக்கப்பட்டிருக்கிறது" (எரே.15:16). இந்த எரேமியாவைப்போல வசனம் கிடைத்தவுடனே அதை ஏற்றுக்கொள்ளும்போது வாழ்க்கையில் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் நாம் அனுபவிக்க முடியும். சிலர் காலம் தாழ்த்துவார்கள், நேரம் பார்ப்பார்கள் அல்லது பலரிடத்தில் ஆலோசனை கேட்டு கீழ்ப்படிவார்கள். இவர்களுடைய கீழ்ப்படிதலை தேவன் விரும்புவது இல்லை. கர்த்தருடைய வார்த்தைக்கு காலதாமதம் செய்யக்கூடாது. உடனே அவைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும். அதுவே குழந்தைகளைப்போல ஏற்றுக்கொள்ளும் தன்மையாகும். குழந்தைகள் பாலின் மேல் வாஞ்சையாயிருப்பதைப்போல நாம் கலங்கமில்லா வசனமாகிய திருவசனத்தின்மேல் வாஞ்சையாயிருக்கவேண்டும்.

தேவனுடைய வசனம் எப்பொழுது நமக்குப் பலன் கொடுக்கிறதென்றால்; "நீங்கள் அதைக்கேட்டு, தேவகிருபையைச் சத்தியத்தின்படி அறிந்துகொண்ட நாள்முதல், அது உங்களுக்குள்ளும் பலன் தருகிறதாயிருக்கிறது" என்று கொலோசெய கிறிஸ்தவர்களுக்கு பவுல் எழுதுகிறார் (கொலோ.1:6). வசனத்தைப் படிக்கிறோம், கேட்கிறோம், இதையெல்லோருமே செய்கிறார்கள். நாம் என்று அதைக்கேட்டு தேவனுடைய இரக்கத்தை சத்தியத்தின்படி அறிந்து கொள்கின்றோமோ அந்த நாள் முதல் அது நமக்குள்ளே பலன் தருகிறது. ஒருவன் கிறிஸ்துவுக்குள் வரும்வரை அவன் பாவியாகவே இருக்கிறான். அவன் வேண்டினாலும், ஜெபித்தாலும், பழைய பாவியாகவே இருக்கிறான். அப்பா, பிதாவே என்று தேவனை நோக்கி கூப்பிட அவன் தகுதியற்றவனாகவே இருக்கிறான். அவன் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு தேவனுடைய பிள்ளையாக மாற்றப்படுகிறான். தேவனுக்கும், அவனுக்கும் நடுவாக இருந்த சுவர் தகர்க்கப்பட்டு, தேவனோடு ஒப்புரவாக்கப்படுகிறான். கிறிஸ்துவின் மூலமாக சுவிகார புத்திர

பாக்கியத்தை அடைகிறான். அந்த நாள் முதல் அவன் தேவனுடைய பிள்ளையாயிருப்பதினால் அவனுடைய வேண்டுதல் கேட்கப்பட்டு தேவனுடைய சகல ஆசீர்வாதத்திற்கும் தகுதியுள்ளவனாகிறான். சகேயு வீட்டிற்கு எப்போது இரட்சிப்பு வந்தது. அவன் காட்டத்தி மரத்தில் உட்கார்ந்திருக்கும்போது அல்ல அவன் இயேசுவை ஏற்றுக்கொண்டு அவருடைய உபதேச சட்டத்திற்கு கீழ்ப்படியும்போது வந்தது. இச்செய்தியை கேட்டுக்கொண்டிருக்கும் அன்பு சகோதரனே, சகோதரியே தேவ வசனத்தை சத்தியத்தின்படி ஏற்றுக்கொண்டு அதற்கு கீழ்ப்படிவாயானால் அது உனக்குள்ளும் பலன் கொடுக்கும். உம்மோடு கர்த்தர் வாசமாயிருப்பார். நீங்கள் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாயிருப்பீர்கள். இச்செய்தியில் நாம் தியானித்தபடி தேவ வசனம் ஜீவனுள்ளதாகவும் எந்தப்பட்டயத்திலும் கருக்கானதாயும் இருக்கிறது. அதை ஏற்றுக்கொள்ளும்போது நம்முடைய இருதயத்தில் அது குடிகொள்ளும் அப்பொழுது மெய்யான அன்புடையவர்களாவோம். மேலும் சத்தியத்தின்படி தேவ வசனங்களை ஏற்றுக்கொள்ளும்போது அது நமக்குள்ளே பலன் கொடுக்கிறதாயிருக்கிறது. அது உங்களுக்குள்ளும் பலன் கொடுக்க தேவனுடைய வசனத்திற்கு இடம்கொடுத்து ஆசீர்வதிக்கப்படுங்கள்.

**நாம் திருவசனத்தைக் கேட்டால் மட்டும் போதுமா?**

இன்றைக்கு அநேகர் வசனத்தைகேட்டாலே ஆசீர்வாதம் வந்துவிடும் என்று நினைத்து கிரியையில்லா கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். யாக்கோபு சொல்கிறார்; "நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தை கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்" என்கிறார் (யாக்.1:22). கிரியையுள்ள கிறிஸ்தவர்கள் நிறைந்து காணப்பட்டால் உலகமே கிறிஸ்தவர்களாக காணப்படுவார்கள். 2000 வருடங்களுக்கு மேலாகியும் தேவனுடைய வசனம் இன்னும் உலகத்தின் பல இடங்களுக்கு செல்லாமலே இருக்கிறது. வசனத்தை கேட்கிறார்கள் ஆனால் அதன்படி தன்னை மாற்றியமைத்துக்கொள்வதில்லை. இது மிகுந்த வேதனையைத் தருகிறது. மாணவன் ஆசிரியர் சொல்லிக்கொடுக்கும் பாடத்தை படிக்காமலே இருந்தால் அந்த ஆசிரியருக்கு எவ்வளவு வேதனை உண்டாகும். அதைப்போல எவ்வளவுதான் பிரயாசப்பட்டு போதித்தாலும் அதைக்கேட்டதோடு நின்று விட்டால் யாருக்கு என்ன பயன்? கிரியையுள்ள கிறிஸ்தவர்களாக மாறவேண்டும். ஆகையால் யாக்கோபு சொல்லும்போது உங்களை நீங்களே வஞ்சியாதபடிக்கு திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் அல்ல அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள் என்கிறார். கர்த்தருடைய போதனையின்படி நடந்த முற்பிதாக்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். அதற்கு எதிர்த்து நின்றவர்கள் வனாந்தரத்தில் அழிக்கப்பட்டார்கள். நீங்களும் உங்களுடைய குடும்பமும் காக்கப்பட கர்த்தருடைய வசனத்திற்கு செவிகொடுங்கள். நோவாவும் அவனுடைய குடும்பமும் அழிவிலிருந்து காக்கப்பட கர்த்தருடைய வார்த்தையின்படியே ஒரு பேழையை உண்டுபண்ணி தேவனுக்குக் கீழ்ப்படிந்தபடியால் அவனும் அவனுடைய குடும்பமும் அழிவிலிருந்து காக்கப்பட்டது. அதைப்போல கிறிஸ்து உண்டுபண்ணி வைத்திருக்கிற அவருடைய சபையை அடையாளம் கண்டு அதில் உங்களை இணைத்துக்கொள்ளப் பிரயாசப்படுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## ஆசிரியர் கடிதம்...

வாசகர்களுக்கு...

ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். ஒவ்வொருமுறையும் கடிதம் எழுதும்போது உங்களுடைய Ref.No-யை தெரியப்படுத்தவும். உங்கள் முகவரி மாறும்போதும் தெரியப்படுத்தவும். வேத அறிவுப்போட்டியில் கலந்துகொள்ளுகிறவர்கள் உங்களுடைய சொந்த முயற்சியில் விடைகளைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.



நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்'' (எபி.10:25). இல்லையெனில் கர்த்தருடைய வசனமே நம்மை நியாயந்தீர்க்கும்.

**முதலாவது உயிர்த்தெழுதலை அறிவித்தவர்கள்(First To Proclaim Resurrection)**

கர்த்தருடைய தூதன், ''சீக்கிரமாய்ப் போய், அவர் (இயேசு) மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள். அவர் உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார்; அங்கே அவரைக் காண்பீர்கள்; இதோ, உங்களுக்கு சொன்னேன் என்றான். அவர்கள் பயத்தோடும் மகா சந்தோஷத்தோடும் கல்லறையை விட்டுச் சீக்கிரமாய்ப் புறப்பட்டு, அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்க ஓடினார்கள்'' (மத்.28:7,8). பொதுவாக ஒரு செய்தி வெகு சீக்கிரத்தில் பரவ வேண்டுமென்றால், பெண்களிடம் கூறிவிட்டால் போதும் பல இடங்களுக்கு மின்னல் வேகத்தில் அந்த செய்தி சென்றடைந்து விடும் என்பார்கள். ஸ்திரீகளுக்குள்ளே இந்தகுணம் இருக்கத்தான் செய்கிறது. அதனால் தான் என்னவோ, கர்த்தருடைய தூதன் இயேசு உயிர்த்தெழுந்த செய்தியை ஸ்திரீகளின் மூலம் சீஷர்களுக்கு அனுப்புகிறார். எப்படியோ, இந்த மாபெரும் நற்செய்தியை உண்மையான சந்தோஷத்துடன் மகதலேனா மரியாளும், மற்ற மரியாளும் முதன் முதலாக சீஷர்களுக்கு அறிவித்தார்கள். சகோதரியே, நீங்கள் என்னநினைக்கிறீர்கள்? ஸ்திரீகளுக்கு இந்த அதிகாரம் கொடுக்கப்படவில்லை என்கிறீர்களா? வேதவாக்கியங்களை தெளிவாகப் புரிந்துகொள்வோம். உபதேசம்பண்ணவும், புருஷன் மேல் அதிகாரஞ்செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; ...(1தீமோ.2:12) என்று வேதம் கூறுகிறது. வேதவாக்கியத்தின்படி நாம் உபதேசிக்கவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும் அதிகாரத்தைப் பெறவில்லை. ஆனால் மத்.28:7,8-ன்படி கர்த்தருடைய அடக்கம் உயிர்த்தெழுதலின் செய்தியை மற்றவர்களுக்கு அறிவிக்கலாமே. கர்த்தருடைய காரியத்தில், கர்த்தருடைய சபை வளர்ச்சிக்கான காரியத்தில் ஈடுபடுவதில் முதலாவதாக இருப்போம்.

விடைகள்: 1. இ 2. அ 3. அ 4. அ 5. ஆ

## பொது அறிவு சோதனை

1. ஒரு விமானம் 900 மைல் வேகத்தை எட்டும்போது ஒலியிருக்காது, ஏனெனில்
அ) அது கீழே விழுந்துவிடும் ஆ) அந்த அளவு வேகத்தில் விமானம் சப்தமிடாது இ) விமானத்தின் வேகம் ஒலியின் வேகத்தைவிட அதிகம்
2. வௌவால் இருட்டில் எவ்வாறு வேகமாக பறக்கிறது?
அ) அதன் எதிரொலியால் அறிந்து செயல்படுகிறது ஆ) அவைகளால் இருளில் பொருள்களை பார்க்க முடியும் இ) அவை குறைந்த வேகத்திலே பறக்கின்றன
3. சந்திரன் காற்று மண்டலத்தைப் பெற்றிருக்கவில்லை, ஏனெனில்
அ) அதன் தடிப்பு தன்மை குறைவானது ஆ) சந்திரனிலுள்ள பாறைகள் எந்தவிதமான வாயுவையும் வெளிவிடுவதில்லை இ) சூரியனிடமிருந்து அதன் அருகாமை
4. மலை உச்சியில் உருளைக் கிழங்குகள் வேக அதிக நேரம் எடுத்துக்கொள்கின்றன, ஏனெனில்
அ) அங்கு காற்றின் அழுத்தம் மிகக் குறைவாக உள்ளது ஆ) அங்கு காற்றின் அழுத்தம் மிக அதிகமாக உள்ளது இ) அங்கு குளிர் அதிகமாக உள்ளது
5. சமவெப்ப நிலையில் நீரைக் காட்டிலும் நீராவியால் உடம்பில் ஏற்படும் புண்மோசமானது, ஏனெனில்
அ) அது ஒரு வாயு ஆ) அந்த வெப்ப நிலையில் அது அதிக கலோரி வெப்பத்தை கொண்டிருக்கும் இ) அது குறைந்த அளவு நீரினைக் கொண்டிருக்கும்

அந்த பூரண அன்பு காணப்பட்டது? இயேசு அவளிடமிருந்த ஏழு பிசாசுகளை அவளை விட்டு அகற்றியிருந்தார். பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டபடியினால் அவ்வாறு அன்பு கூர்ந்தாள். பிசாசின் பிள்ளையாயிருந்த அவள் தேவனுடைய பிள்ளையாக மாற்றப்பட்டாள். இது எப்பேர்பட்ட விடுதலை! அன்பு சகோதரியே, உங்களையும் கூட தேவன் தமது குமாரன் மூலமாக பிசாசின் கிரியைகளாகிய பல்வேறு பாவங்களிலிருந்து விடுவித்திருக்கலாம். விடுதலையின் சந்தோஷத்தை அனுபவிக்கின்ற நீங்கள் முடிவுபரியந்தம் இயேசுவின் மேல் அன்புகூர வேண்டியது அவசியமல்லவா? உலகத்தில் அன்புகூராதிருங்கள். உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையாயிருக்கிறது. உலக ஜனங்களுக்கு பயந்து கொண்டு அந்த சீஷர்களைப் போல் உங்களை ஒளித்துக்கொள்ளாதீர்கள். முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான் என்று வேதம் கூறுகிறது.

முதலாவது கல்லறையினிடத்தில் இருந்தவள் (First At The Tomb)

இயேசு அடக்கம்பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் அதாவது வாரத்தின் முதல்நாளில் சுகந்தவர்க்கமிடும்படி கல்லறையினிடத்திற்கு மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் வந்தார்கள். ஆனால் "வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே இயேசு எழுந்திருந்தபின்பு, மகதலேனா மரியாளுக்கு முதல் முதல் தரிசனமானார்" (மாற்.16:9). மற்ற ஒருவரும் முதல் முதல் இயேசுவை தரிசிக்காமல் மகதலேனா மரியாள் மட்டும் தரிசிக்கும் பாக்கியம் பெற்றதற்குக் காரணமென்ன? கல்லறையில் இயேசுவைக் காணவில்லை என்ற செய்தி அறிந்து, மற்ற சீஷர்களும் ஸ்திரீகளும் கல்லறையினிடத்திற்கு வந்து பார்த்து விட்டு மீண்டும் தங்கள் இடத்திற்குத் திரும்பிப் போய்விட்டார்கள் (யோவா.20:1-10). ஆனால் மகதலேனா மரியாளோ கல்லறையினருகே வெளியே நின்று அழுதுகொண்டிருந்தாள். இயேசுவின் மேல் அவள் கொண்டிருந்த அன்பினால் அவள் கல்லறையை விட்டு அகலாதிருந்தாள். அதனால் இயேசுவை முதல் முதல் தரிசிக்கும் பாக்கியம் பெற்றாள். அன்பு சகோதரியே, கர்த்தருடைய நாளிலே கர்த்தருக்கு சுகந்தவர்க்கமிட வந்தவள் கர்த்தரை தரிசித்தாள். நீங்கள் கர்த்தருடைய நாளிலே எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள்? சபையாகக் கூடி தேவனை ஆராதிக்கவா அல்லது இப்பிரபஞ்சத்தின் தேவனைப் பிரியப்படுத்தவா? சிந்தியுங்கள். இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் உலக சம்பத்தைக் காட்டி தன்னைப் பணிந்து கொள்ளும்படி தந்திரமாக செயல்படுவான் உங்களுடைய உலகப்பிரகாரமான தேவைகள், மற்றும் விருப்பங்களை அறிந்தவனாய் உங்களை மோசம்போக்கும்படி சுற்றித்திரிகிறான். இயேசுவையே வஞ்சிக்கத் திட்டமிட்டவன் உங்களை விட்டுவிடுவானா? மத்தேயு4:10,11-ல் இயேசுவைப் பார்த்து நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத்தருவேன் என்று சொன்னான். அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்" வேதவசனத்தினால் அவனை ஜெயித்தார். பிசாசு கிறிஸ்தவர்களையே குறிவைத்துள்ளான். ஞாயிற்றுக் கிழமை தான் சகல வைபவங்களும், தேர்வுகளும் நடைபெறுகின்றன. என்னசெய்வது எனக்கு வேலைகிடைக்காமல் கஷ்டப்படுகிறேனே என்று சொல்லி வாரத்தின் முதல் நாளை கர்த்தருடைய சமூகத்தில் செலவிட்டு தேவனை ஆராதிப்பதைத் தவிர்த்து உலகவேலையை நோக்கி ஓடுகின்றனர். கர்த்தருடைய நாளை இவர்கள் கொள்ளையடிக்கின்றனர். சகோதரியே, சற்று சிந்தியுங்கள் "சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்.



# நம்முடைய குடும்பம் - Our Family

S.I.Reagan
Associate Editor



இன்று நம் குடும்பம் எப்படி இருக்கிறது? அநேக குடும்பங்கள் கிறிஸ்தவ குடும்பங்கள் என்று சொல்லியும் கிறிஸ்தவ குடும்பங்களாக வாழ்வதில்லை. காரணம் அவர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழியில் கிறிஸ்தவர்களாக தான் வாழ்கின்றோம் என்று சொல்லி தங்களை மேன்மைப்படுத்திக்கொண்டு வாழ்கின்றார்கள். ஒரு குடும்பத்தில் நான்கு பேர் என்றால்; ஒருவர் நான் நன்றாய் ஜெபிக்கிறேன், மற்றொருவர் நான் வாரம் வாரம் சபைக்கு போகின்றேன், இன்னொருவர் நான் சபைக்கு காணிக்கை கொடுக்கின்றேன், கடைசி நபர் நான் நல்ல விசுவாசி கர்த்தர் சொல்லுகிற வசனங்களை விசுவாசிக்கிறேன் என்று சொன்னால் இது கிறிஸ்தவ வாழ்க்கையை வெளிப்படுத்துகிறதே தவிர வேறொன்றும் இல்லை. இந்த குடும்பத்தைப் பார்க்கும்போது; ஒருவர் மட்டுமே காணிக்கை தருகிறார், ஒருவர் மட்டுமே விசுவாசிக்கிறார், ஒருவர் மட்டுமே ஜெபிக்கிறார் இது ஒரு கிறிஸ்தவ குடும்பமல்ல. வேதத்தில் தேவன் நமக்கு சில கிறிஸ்தவ குடும்பங்களை காண்பித்திருக்கிறார். அந்த குடும்பங்களை நாம் தியானிக்கலாம்.

1. **நோவாவின் குடும்பம்:** ஆதி.7:1-ல் வாசிக்கும்போது இந்த குடும்பம் கர்த்தர் சொன்ன வார்த்தையின்படி ஒருநபர் மட்டும் அல்ல தங்கள் குடும்பம் முழுவதும் கீழ்ப்படிந்ததால் உலக அழிவிலிருந்து காக்கப்பட்டார்கள். அது மட்டும் அல்ல அந்த குடும்பத்தை கொண்டு கர்த்தர் புதிய உலகை உண்டாக்கினார். அந்த குடும்பம் தேவனுடைய பார்வையில் நீதிமானின் குடும்பம் என்று அழைக்கப்பட்டது. இவர்கள் குடும்பமாக தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தார்கள் தனித்தனியாக அல்ல முழுக்குடும்பமாக.

2. **ஆபிரகாமின் குடும்பம்:** ஆதி.12:1-3 இந்த குடும்பம் கர்த்தரிடத்தில் விசுவாசமாய் இருந்து கர்த்தர் இவர்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தை பெற்றுக்கொண்டார்கள். 100 வயதில் தேவன் ஆபிரகாமுக்கு ஈசாக்கை கொடுத்தார். அந்த குடும்பம் தேவனுடைய பார்வையில் விசுவாசமுள்ள குடும்பமாக காணப்பட்டது.

3. **யோசுவாவின் குடும்பம்:** யோசுவா 24;15 இந்த குடும்பம் நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம் என்று சொல்லி கர்த்தரைத் தொழுதுகொண்டார்கள்.

4. **கொர்நெலியுவின் குடும்பம்:** அப்.10:2 இந்த குடும்பம் கர்த்தருக்கு பயந்து ஜெபிக்கின்ற குடும்பமாய் தான தர்மங்களை செய்கிற குடும்பமாய் இருந்தார்கள். சங்.128:1-4 வாசிக்கிறபடி ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

5. **ஆக்கில்லா மற்றும் பிரிஸ்கில்லாள்:** அப்.18:26 இந்த குடும்பம் கர்த்தருடைய வசனத்தை மற்றவர்களுக்குப் போதிக்கும் குடும்பமாய் இருந்தார்கள். இவர்கள் குடும்பமாய் சேர்ந்து கர்த்தருக்கு உகந்தவர்களாய் வாழ்ந்தார்கள். இந்த குடும்பங்களைப்போல வசனத்தை மற்றவர்களுக்கும் போதித்து தேவனுக்கு உகந்தவர்களாய் வாழப் பிரயாசப்படுவோம். அப்.5:1-10ல் வரும் அனனியா சப்பிராளைப்போல இல்லாமல் தேவனை ஏமாற்றாமல் வாழ்வோம். தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக!

# நியாயத்தீர்ப்பு உண்டென நாம் ஏன் நம்புகிறோம்

## Why We Believe In The Judgment Day

*J.C.Choate*



நியாயத்தீர்ப்பு நாள் ஒன்று இருக்குமென வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது. அதாவது நாம் நம்மைக் குறித்து கணக்கொப்புவிப்பவர்களாயிருக்கிறோம் என்றும் நாம் நம்முடைய வாழ்வில் சொல்லிய, செய்த எல்லாவற்றிற்கும் காரணம் ஒப்புவிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம் என்றும் பொருள்படுகிறது. அதிகமானோர் தாங்கள் செய்துள்ள ஏதோ ஒன்றிற்குப் பொறுப்பாளியாக இருக்கின்றோம் என்ற எண்ணத்தையே விரும்புகிறதில்லை. அவர்கள் தவறு செய்யும்போது போலீசுக்குப் பதில் சொல்லவும் பொறுப்புடையவர்களாயிருக்கிறோம் என்பதற்கும் விருப்பப்படுகிறதில்லை. ஆயினும் இது வாழ்வின் உண்மையாயிருக்கிறது. கூலிக்கு வேலைசெய்கிறவர் தங்களுடைய எஜமானுக்குப் பதிலளிக்கவேண்டும்; பள்ளிக்கு அல்லது கல்லூரிக்குச் செல்லுகிறவர் தேர்வு நாளை சந்தித்தே ஆகவேண்டும்; இராணுவத்தில் பணிசெய்கிறவர் தங்களுடைய உயர்அதிகாரிகளுக்கு அறிக்கை சமர்பிக்க வேண்டும், இதுபோல வித்தியாசமான அநேகக் காரியங்கள் நம்முடைய ஜீவியத்தில் காணப்படுகிறது. நாம் தலைவராகவோ, பணக்காரராகவோ அல்லது மரித்தவராகவோ இல்லாவிட்டால் இப்பேர்பட்ட பொறுப்புகளுக்குத் தப்பித்துக் கொள்வது எவ்வழியிலும் கடினமானதே. ஆனால் பணக்காரராயிருந்தபோதிலும், தேசங்களுக்குத் தலைவராக இருந்தபோதிலும் மற்றும் உயிருள்ள அனைவரும், மரித்தவர்களும் ஒருநாள் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு முன் நிற்க வேண்டும்.

எபிரெய ஆசிரியர், “அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே,” (எபி.9:27) என்கிறார். ஆனால் யார் அங்கே இருப்பார்? பவுல் நமக்குச் சொல்லுகிறார், இந்த வார்த்தைகளைக் கேளுங்கள்: “ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்” (2கொரி.5:10). அங்கே நியாயத்தீர்ப்பு மட்டும் இருக்காது, நாமெல்லாரும் கூட அங்கே இருப்போம், மேலும் நீதியுள்ள நியாயாதிபதியாகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக வெளிப்படுவோம், எல்லாரும் தங்களுடைய கிரியைகளுக்குத் தக்கபடி நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடைவோம்.

பவுல் ரோமக் கிறிஸ்தவர்களுக்கு, “நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதுமில்லை, ஒருவனும் தனக்கென்று மரிக்கிறதுமில்லை. நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம், நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம்; ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம். கிறிஸ்துவும் மரித்தோர்மேலும் ஜீவனுள்ளோர் மேலும் ஆண்டவராயிருக்கும் பொருட்டு,



பெண்கள் பகுதி

# விசேஷித்த மேன்மை

## Special Distinction

*- Glory Arjunan*



இன்றைய நாளில் பெண்கள் இப்பூமியிலும், விண்வெளியிலும் எத்தனை எத்தனையோ சாதனைகளைப் படைத்து மண்ணுக்கு மகிமையைக் கொண்டு வருகின்றனர். சமீபத்தில் சுனிதா வில்லியம்ஸின் விண்வெளி சாதனை பூமியை வியக்கப்பண்ணினது. பெண்களாகிய நம்மெல்லோருக்கும் இது பெருமையை மாத்திரமல்ல எதையும் சவாலாக்கிக் கொள்ளும் ஊக்கத்தையும் அளிக்கிறது. இருந்தபோதிலும் அப்போஸ்தலனாகிய பேதுரு, “கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்... அவருடைய வாக்குத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்” (2பேது.3:10,13) என்று எழுதியிருக்கிறதை வாசிக்கும்போது எல்லாம் மாயை என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது. ஆம், எல்லாம் மாயை! “சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற காரியங்களையெல்லாம் கவனித்துப் பார்த்தேன்; இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது” (பிர.1:14) என்கிறார் ஞானி சாலொமோன். இப்படியிருக்க அழிந்துபோகாத ஆவிக்குரிய காரியங்களைச் (Spiritual Matters) சிந்தித்து, அதைப் பற்றிக்கொண்டு, நீதிவாசமாயிருக்கும் புதிய இடத்திற்குச் செல்ல நம்மை ஆயத்தப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுவோம். இம்முயற்சிக்கு உதவியாக வேதாகமத்தில் விசேஷித்த இடத்தினைப் பிடித்துள்ள சில பெண்களை நமக்கு மாதிரியாகக் கொள்வோம்.

சிலுவையின் கடைசிபரியந்தமும் (Last At the Cross) இருந்தவர்கள்: இயேசுவின் சிலுவைப் பயணத்தில் கடைசிமட்டும் இயேசுவோடு இருந்தவர்கள் மகதலேனா மரியாளும் யோசேயின் (இயேசுவின் தாய்) தாயாகிய மரியாளும்தான். இயேசுவோடு உண்டு உறங்கி ஊழியஞ்செய்த இயேசுவின் சீஷர்களெல்லாரும் ஓடிவிட்டனர். ஆனால் தேவனுடைய ராஜ்யம் வரக் காத்திருந்தவனாகிய யோசேப்பு என்பவன் ஒரு கனம்பொருந்திய ஆலோசனைக்காரன், இவன் வந்து இயேசுவின் சரீரத்தைப் பெற்று, மெல்லிய துப்பட்டியை வாங்கிக் கொண்டு வந்து, மரித்த இயேசுவை சிலுவையிலிருந்து இறக்கி, அந்தத் துப்பட்டியிலே சுற்றி, கன்மலையில் வெட்டியிருந்த கல்லறையிலே அவரை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு கல்லைப் புரட்டிவைத்து இவ்விதமாக அடக்கம்பண்ணினான். “அவரை வைத்த இடத்தை மகதலேனா மரியாளும் யோசேயின் தாயாகிய மரியாளும் பார்த்தார்கள்” (மாற்.15:47). அப்படியானால் இந்த ஸ்திரீகள் கல்லறைவரைக்கும் சென்றிருக்கிறார்கள். ஆனால் சீஷர்களோ பயந்து தங்களை ஒளித்துக்கொண்டார்கள். “பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்” இயேசுவின்மேல் முழுமையான அன்பு கொண்டிருந்ததால் அந்த இரு ஸ்திரீகளும் கல்லறை வரை சென்றார்கள். ஒருவேளை இயேசுவின் தாய் என்பதால் இயற்கையான தாய் அன்பு மரியாளிடம் காணப்பட்டது என்று சொல்லலாம். ஆனால் மகதலேனா மரியாளிடம் எப்படி

மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ள வைகளா யிருக்கிறது"(2தீமோ.3:16,17). ஒருவரோடொருவர் ஐக்கியங்கொள்ளுவதின் மூலம் பெலனைப் பெற்றுக் கொள்ள, "ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்"(மத்,18:20). எபிரெயர்10:24ன்படி நாம் ஒருவருக்கொருவர் அன்பிலும் நற்கிரியைகளிலும் உற்சாக மூட்டுகிறவர்களாயிருக்கிறோம். நாம் சகோதரரை ஒருபோதும் சந்திக்காதவர்களாகவும், அவர்கள் செய்கின்ற பணிகளில் பங்குகொள்ளாதவர்களாயிருப் போமானால், நாம் எவ்வாறு சகோதரரை உற்சாகப்படுத்தி, பெலப்படுத்தக் கூடும்?

தேவனை ஆராதிக்கும்படிக்கு பரிசுத்தவான்களோடு கூடிவருவதை புறக்கணிக்கும் போது நம்முடைய வாழ்வில் சரியான சமநிலையைக் கொண்டிருக்க முடியாது ஒவ்வொரு சமயமும் ஒரு கிறிஸ்தவன் ஆராதனையைப் புறக்கணிப்பதையே தெரிவுசெய்கிறான், மேலும் அவன் தேவனையோ, ஆராதனையையோ சபையையோ தன் வாழ்வில் முதன்மையாக வைக்காத தன்னுடைய மாதிரியையே தன்னுடைய செல்வாக்கின் கீழ் இருப்பவர்களுக்கும் போதிக்கிறான். குறிப்பாக அவன் ஆராதனையிலும், வேதஆராய்ச்சியிலும், தேவனை அறியும் அறிவில் வளர்வதிலும் கலந்து கொள்ளாததின் மூலம் தன்னுடைய பிள்ளைகளின் ஆத்துமாக்களை ஆபத்திற்குள்ளாக்குகிறான்.

ஒரு வளர்ந்த கிறிஸ்தவன் தன்னுடைய சரீரத்தில் ஆராதனைக்குச் செல்ல இயலாத சூழ்நிலையைத் தான் ஒருபோதும் சபை கூடி வருதலை இழந்துவிடக்கூடாது என வெகு காலத்திற்கு முன்னே தீர்மானித்து விடுகிறான். ஞாயிற்று கிழமையில் அவன் இவ்வினா வைப்பற்றிய எந்த ஒரு புதிய தீர்மானத்தையும் உருவாக்குகிறதில்லை; அவன் தான் தேவனுடைய ஜனத்தைச் சேர்ந்தவன் என்பதை அறிகிறான், அவன் தன்னுடைய சிருஷ்டிகரை துதித்து அவருடைய இரட்சிப்பின் மாபெரும் கிரயத்தை நினைவுகூருகிறான். எனவே அவன் ஆராதிக்கும்படி சபை கூடிவரும்போது சபையோடு ஐக்கியம் கொண்டிருப்பான்.

நீங்கள் தேவன் அறிவுறுத்தியிருக்கிறபடி தேவனை ஆராதிப்பதின் முக்கியத்துவத்தைப் பற்றிய காரியத்தில் தவறான தீர்மானத்தை உருவாக்கியிருப்பீர் களானால், தயவு செய்து திரும்பச் சென்று ஜெபத்துடனே உங்களுடைய தெரிந்து கொள்ளுதலைப் பற்றி சிந்தித்துப்பாருங்கள். இதுவே தவறான ஒன்றும், உங்களுடைய நித்திய ஆக்கினையில் முடிவுபெறக்கூடிய ஒன்றாகவும் இருக்கிறது. உங்களுடைய இரட்சிப்பு மாபெரும் கிரயமாகிய தம்முடைய குமாரனின் மரணத்தில் தேவனால் நிறை வேற்றப்பட்டதாயிருக்கிறது.

## நடப்புச் செய்திகள்

- சுதந்திர இந்தியாவில் 1952 முதல் 2014 வரை பதினாங்கு பிரதமர்கள் இந்தியாவை ஆட்சிசெய்திருக்கிறார்கள்.
- புதுச்சேரியில் பாஸ்போர்ட் உதவி மையம் விரைவில் தொடங்கப்படட உள்ளது.
- தென் ஆப்பிரிக்காவின் ஜோகன்ஸ் பர்க் நகரில் கனரா வங்கி தனது கிளையை தொடங்கியுள்ளது.



மரித்தும் எழுந்தும் பிழைத்துமிருக்கிறார். இப்படியிருக்க, நீ உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிற தென்ன? நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே. அந்தப்படி; முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவுயாவும் தேவனை அறிக்கைபண்ணும் என்று என் ஜீவனைக்கொண்டு உரைக்கிறேன் என்பதாய்க் கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது. ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்" (ரோம.14:7-12).

அத்தேனே பட்டணத்தாரிடம் பேசுகையில், பவுல், "அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர்போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒருநாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார் என்றான்" (அப்.17:30,31) தேவன் இந்த உலகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார், அவருடைய நியாயத்தீர்ப்பு நீதியாயிருக்கும் என்று பொருள்படும். இது அநியாயமான விதத்திலும் நடக்காது மேலும் அவர் பாரபட்சம் காண்பிக்கவும் மாட்டார் அல்லது ஒருவரிடம் பட்சமாகவும் இன்னொருவரிடம் பார பட்சமாகவும் இருக்கமாட்டார். கர்த்தருடைய வருகையிலும் இவ்விதமாகவே நடக்கும். கிறிஸ்து அந்த நாளைக் குறித்து நமக்குச் சொல்லுகையில் தேவதூதர்களும் அந்நாளை அறியார்கள், பரலோகத்திலிருக்கிற பிதா ஒருவரே அறிவார். தேவதூதர்களும் அறியாது, பிதா ஒருவரே அறிவார் என்றால், பின் மனிதன் எவ்வாறு அறிவான்? நிச்சயமாக கிறிஸ்து மீண்டும் எப்பொழுது வருவார் என்பதை மனதில் அறியமாட்டான், மேலும் நியாயத்தீர்ப்பு எப்போது நடைபெறும் என்பதையும் அவன் அறியமாட்டான். அத்தோடுகூட தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை மரணத்தினின்று எழுப்பியவர் மற்ற மனிதர்களுக்கும் இதை உறுதியளித்து அவர்மூலமாகவே தேவன் இந்த உலகத்தை நியாயந்தீர்ப்பார் என நிச்சயமாக அறிவுறுத்தப்படுகிறோம். பேலிக்ஸ் முன் பவுல் நின்று அவனுக்குப் பிரசங்கித்தபோது இவ்வாறாக அறிவுறுத்தப்படுகிறோம். வேதவாக்கியம் கூறுகிறது, "அவன், நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில் பேலிக்ஸ் பயமடைந்து: இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன் என்றான்" (அப்.24:25). பேலிக்ஸ் வாழ்ந்துகொண்டிருந்த வாழ்வை அறிந்தவனாய், அவன் கணக்கொப்புவிக்க வேண்டியவனாகவும் அவனுடைய செய்கைகள் அனைத்திற்கும் அவன் தேவனுக்குப் பதிலளிக்க வேண்டியவனாகவு மிருக்கிறான் என்று பவுல் அவனை எச்சரிக்கத் துணிந்தான். பேலிக்ஸ் பயமடைந்தது ஆச்சரியமல்ல. அது அவனைப் பயமுறுத்தியது. ஆயினும், அவன் அவற்றில் கவனம்செலுத்தவில்லை என்பது வருந்தத்தக்க ஒன்றே, ஆனால் தனக்குச் சமயமானபோது அழைப்பதாகச் சொல்லி பவுலை அனுப்பிவிட்டான். நாம் அறிந்துள்ளபடி, அதன்பின் அவன் ஒருபோதும் பவுலை அழைக்கவில்லை, இந்நிலையிலே அவன் மரித்துப்போனான். என்ன பரிதாபம்!

இயேசு தம்முடைய நாட்களிலிருந்த மதவைராக்கியமுள்ளவர்களிடம் பேசுகையில், "விரியன்பாம்புக் குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க,

நலமானவைகளை எப்படிப் பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான். மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்'' (மத்.12:34-37). ஒருவன் தான் செய்கிறதைக் குறித்து உணர்வுள்ளவனாயிருப்பது மாத்திரமல்ல, தன் நினைவுகளைக் குறித்தும் தான் என்ன பேசுகிறோம் என்பதைக் குறித்தும் உணர்வுள்ள வனாயிருக்க வேண்டும். இவையெல்லாம் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டு ஒரு மனிதன் எப்படிப்பட்டவனாயிருக்கிறான் என்பதைத் தெரியப்படுத்துகிறதாயிருக்கிறது. ஆனால் தான் செய்கிறதைக்குறித்து அல்லது சொல்லுகிறதைக் குறித்து அக்கறையில்லாத ஒருவன் இவையெல்லாவற்றிற்கும் ஒருநாள் கணக்கொப்புவிக்க வேண்டுமென்பதை தன் மனதில் கொள்ளவேண்டும். அது ஒருவனை அவன் செயல்படும் முன் அல்லது பேசுகிறதற்குமுன் அதிக ஆழ்ந்த யோசனைக்குள்ளாக்கி இருமுறை அவனை சிந்திக்கப்பண்ணுகிறது என்பதை அறியவேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் மனுஷருடைய அந்தரங்கங்களைக்குறித்து இயேசுகிறிஸ்துவின் மூலம் தேவன் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் நாள் வருமென சொல்லுகிறார் (ரோ.2:16). எபிரெய ஆசிரியர் நம்மை நினைப்பூட்டுகிறார், ''தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்குமுன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது. அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்'' (எபி.4:12,13). பவுல் சொன்னான், ''ஆயினும் நான் உங்களாலேயாவது மனுஷருடைய நியாயநாளின் விசாரணையினாலேயாவது தீர்ப்பைப் பெறுவது எனக்கு மிகவும் அற்ப காரியமாயிருக்கிறது; நானும் என்னைக் குறித்துத் தீர்ப்புச்சொல்லுகிறதில்லை. என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன்; ஆகிலும் அதினாலே நான் நீதிமானாகிறதில்லை; என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே. ஆதலால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்குமுன்னே யாதென்றைக் குறித்தும் தீர்ப்புச்சொல்லாதிருங்கள்; இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும்'' (1கொரி.4:3-5). மீண்டும் பவுல், ''நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது;'' (2தீமோ.4:1) என்றான். பவுல் தொடர்ந்து தன்னைக் குறித்து, ''இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர்



ஒவ்வொரு நபரைக் காட்டிலும் தமக்கே முதலிடம் கொடுக்குமாறு ஜனங்களைக் கேட்டுக்கொண்டார். மத்தேயு6:33ல் அவர் ''முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்'' என்றார்.

நாம் எவ்விதமான ''சிரமம்'' அல்லது 'அசௌரிகம்' அல்லது ''செலவு'' போன்றவை அவரைப் பிரியப்படுத்தும்படிக்கு அவசியமானது என அவைகளைக்கடந்து செல்ல விருப்பமில்லாதவர்களாக இருந்தால் நாம் கிறிஸ்துவை முதலாவது தேட முடியாது அல்லது அவரைப்பின்பற்றவும் முடியாது.

எபிரெயர்10:25, ''சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்ல வேண்டும்'' என விளக்குகிறது.

''சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்''.

''மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே; தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன் படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்''

கிறிஸ்தவர் ஒருவருக்கொருவர் ஏன் கூடிவரவேண்டும் என்பதற்கு நியாயமான காரணங்கள் பல உண்டு.

தேவனை ஆராதிக்க. எபிரெயர்12:24 சபை கூடிவருதலைப் பற்றி ஒரு அழகான சித்திரம் வரைகிறது, ''நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம்பதினாயிரமான தேவதூதர் களினிடத்திற்கும்,பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற் பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும் ..... வந்து சேர்ந்தீர்கள்''.

கிறிஸ்துவின் தியாகத்தை நினைவு கூர. அப்போஸ்தலர்20:7ல், பவுல் சபையோடு சேர்ந்து ஆராதிப்பதற்கு ஒரு வாரம் துரோவா பட்டணத்தில் தங்கியிருந்தான் என வேதவாக்கியம் கூறுகிறது; ''வாரத்தின் முதல் நாளிலே, அப்பம்பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்''.

கூடி ஆராய்வதன் மூலம் தேவனுடைய வார்த்தைகளை கற்றுக்கொள்ள. ''....சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவானாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு''(2தீமோ.2:15). ஏன்? ஏனென்றால், ''வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய

பெண்கள் பகுதி

# ஆராதனைக்குச் செல்வது மிகச் சிரமமாயிருக்கிறது

## Going To Worship Is Too Much Trouble

*-Betty*



ஜனங்கள் தங்களுடைய வயோதிப நாட்களில் கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் எழுந்து வேலைக்குச் செல்லுகின்றனர். சிலர் வயல்களுக்கு அதிகதூரம் நடந்து செல்கின்றனர், மற்றவர்கள் - சைக்கிள், மோட்டார் ஸ்கூட்டர், பஸ் அல்லது தங்களுடைய சொந்த கார் போன்றவற்றில் தங்களுடைய வேலைக்கு சவாரி செய்யலாம் ஆனால் ஒருவருடைய வேலைஸ்தலத்திற்கு செல்ல எடுத்துக்கொள்ளும் சிரத்தை மிகப்பயங்கரமானதாக இருக்கலாம். என்றாலும், ஒருவன் வாழவேண்டுமென்றால், உணவு வாங்குவதற்கும் வாடகை செலுத்துவதற்கு அல்லது வீட்டிற்கு வாடகை செலுத்துவதற்கும், தன்னுடைய பொறுப்பைவகிப்பதற்கும் அதன்பின் சம்பளம் பெறுவதற்கும் ஒருவன் கட்டாயம் வேலை செய்தாக வேண்டும்.

மாறாக, ஒரு புதிய வாரத் துவக்கத்திற்கு அடையாளமாகவும், தம்முடைய ஜனங்கள் தம்மிடத்தில் நெருங்கி வந்து சேவிக்கவும் ஒருவருக்கொருவர் நெருக்கமாயிருக்கவும் தேவன் தமக்கென்று ஒரு நாளை நியமித்திருக்கிறார். புதியஏற்பாட்டில் கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளில் - நாம் ஞாயிறு என அழைக்கிற அந்நாளில் ஆராதிக்கும்படி கூடிவந்ததற்கான ஆதாரங்களையும், திருஷ்டாந்தங்களையும் நாம் கொண்டிருக்கிறோம்.

இருந்தபோதிலும், அசௌரியத்தோடும் ஆராதிக்கச் செல்லுமிடத்திற்கான செலவுகளினிமித்தமாகவும் தங்களை சிரமப்படுத்திக்கொள்ளுவது தேவையற்ற ஒன்று எனக் காண்கிற கிறிஸ்தவர்கள் உண்டு. சிலர், "நான் வீட்டிலே என்னுடைய ஜெபங்களை ஏறெடுத்துக் கொள்ளுவேன்" எனக் கூறி தங்களுடைய மனசாட்சியை சாந்தப்படுத்திக் கொள்கின்றனர். "ஆனால் வீட்டிலுள்ள என் வேலைகளைசெய்வதற்கும், மார்க்கெட் செல்வதற்கும் ஓய்வெடுப்பதற்கும் எனக்கு ஒரே ஒரு நாள் மட்டுமே இருக்கிறது" என்ற வேறு காரணமும் உண்டு. தொடர்ந்து மற்றவர்கள் தாங்கள் ஆஜராகாத காரணத்திற்கு "பிரசங்கியாருடைய பிரசங்கம் சுவாரஸ்யமில்லாதிருக்கிறது" எனக்கூறி சபை ஊழியரை குற்றப்படுத்துவார்கள். ஆராதனையில் நான் எதையும் பெற்றுக்கொள்ளமுடியவில்லை- நான் வெறுமனே வீட்டிலே தங்கியிருப்பேன் எனக் கூறுகின்றனர்.

சிலருடைய குடும்பங்களில், கணவன் ஆராதனைக்குச் செல்லுவான், ஆனால் அவன் தன்னுடைய மனைவியையும் குழந்தைகளையும் அழைத்துச் செல்வதின் அவசியத்தை உணருவதில்லை. குறிப்பாக தன்னோடு கூட்டிச்செல்லும்போது உண்மையாகவே இது ஒரு பிரச்சனையா? அவன் தான் மட்டும் இப்போது ஆராதனையில் கலந்துகொள்ளுவோம், பிள்ளைகள் பெரியவர்களாகும் போது செல்லலாம் எனக் கருதுகிறான்.

இந்த எல்லாவிதமான சாக்குப்போக்குகளும் இந்த மன நிலைகளும் எத்தனை தவறானது? தம்முடைய ஊழியம் முழுவதிலும் இயேசுவின் செய்தி "வாருங்கள் என்னைப்பின்பற்றுங்கள்" என்பதாகவே இருந்தது. அவர் ஒவ்வொரு காரியம் மற்றும்



பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்" (2தீமோ.4:8) என்று சொன்னான். பவுல் கர்த்தரே நீதியுள்ள நியாயாதிபதியாயிருக்கிறார் என்றும் அவர் நீதியின் கிரீடத்தைத் தனக்கு அந்நாளிலே, அதாவது நியாயத்தீர்ப்பு நாளிலே தருவார் என்றும் அந்த வெகுமதியினை தனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அல்லது அவருடைய வருகைக்கு ஆயத்தமாயிருக் கிறவர்களுக்கும் அதைத் தந்தருளுவார் என்று கூறுவதைக் கவனியுங்கள்.

எபிரெய ஆசிரியர் யாவருக்கும் நியாயாதிபதியாயிருக்கிற கர்த்தரைக் குறித்துப் பேசுகிறார் (எபி.12:23). அதன் பின் எபிரெயர் 13:4-ல் "விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக; வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்" என்கிறார்.

மத்தேயு 25-ல் கிறிஸ்து சொல்வதை நாம் அறிந்திருக்கிறோம், "அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார். அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள், மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரித்து, செம்மறியாடுகளைத் தமது வலது பக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார்" (மத்.25:31-33) என்றார். இங்கே கர்த்தர் நியாயத்தீர்ப்பினை ஒரு நாளில் சம்பவிக்கும் நாளாக படம்பிடித்துக் காட்டுகின்றார். இது அவருடைய வருகையின் நாளில் இருக்கும், எல்லா தேசங்களும் ஜனங்களும் அவருக்கு முன்பாக கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். அந்த சமயத்தில் அவர் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் பிரிப்பதைப்போல நன்மையானவற்றை தீமையானவற்றிலிருந்து பிரிப்பார். அவருடைய வலது கை பக்கத்திலிருக்கும் செம்மறியாடுகள் நீதிமான்களாக, கிறிஸ்தவர்களாக, சபையாக குறிப்பிடப்படும். அவருடைய இடது கைப் பக்கத்தில் உள்ள வெள்ளாடுகள் துன்மார்க்கராகவும், வஞ்சகர்களாகவும், அவிசுவாசமுள்ள கிறிஸ்தவர்களாகவும் குறிப்பிடப்படும். நியாயத்தீர்ப்பு நடந்தேறியபின், துன்மார்க்கர், "....நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள்" (மத்.25:46) என வேதவாக்கியம் கூறுகிறது.

இப்போது இவையெல்லாவற்றையும் சுருக்கமாகக் காண்கையில், நாம் என்ன கண்டுகொள்கிறோம் என்பதைத் தயவுசெய்து கவனிப்போம்:

1. தேவனுடைய நியாயத்தீர்ப்பு ஒரு நாளில் வருகின்றது, ஆனால் அது மரணத்திற்குப்பின் அல்லது கர்த்தருடைய வருகையில் இருக்கும்.

2. அந்த மகாநாளில் எல்லாரும் இருப்போம். கற்பனை பண்ணுங்கள் என்றென்றும் வாழ்ந்திருக்கிற அல்லது என்றென்றும் வாழவிருக்கிற அனைவரும் அந்த நாளில் அங்கே இருப்பார்கள். ஒருவனும் மறைந்து கொள்ளவோ அல்லது தப்பித்துக்கொள்ளவோ முடியாது. ஒருவனும் கவனித்தும் கவனிக்காமலிருக்க இயலாது. இதில் சிறியோர், பெரியோர், நல்லோர் தீயோர், ஐசுவரியவான் ஏழை, அரசன், ஆண்டி எல்லோரும் சேர்க்கப்படுவார்கள்.

3. தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து மூலம் நியாயந்தீர்ப்பார்.

4. இது ஒரு பாரபட்சமற்றதாயிருக்கும், எல்லாரும் நல்லவராயிருந்தாலும், தீயவராயிருந்தாலும் அவரவர் கிரியைகளுக்குத் தக்கபடி நியாயந்தீர்க்கப்படுவார்கள்.

5. ஒவ்வொரு வீணாண வார்த்தையும், ஒவ்வொரு செய்கையும், ஒவ்வொரு ரகசியமான நினைவும், அந்த மகா நாளில் நியாயந்தீர்க்கப்படும்.

6. இந்த நியாயத்தீர்ப்பே முடிவானது. அங்கே இரண்டாவது சந்தர்ப்பங்களுக்கு இடமில்லை. இது ஒரு நீதியான நியாயத்தீர்ப்பாகும்.

7. அந்த நாளில் நீதிமான் நித்திய ஜீவனைப்பெறுவான், துன்மார்க்கனோ சாத்தானின் நரகத்தில் நித்திய அழிவைப் பெறுவான்.

நீங்கள் நியாயத்தீர்ப்பிலே கர்த்தரைச் சந்திக்க ஆயத்தமாயிருக்கிறீர்களா? கிறிஸ்து சொன்னதை நினைவுகூருங்கள், "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்" (யோவா.12:48) என்றார். மேலும், கிறிஸ்து "மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறது போல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள் செய்திருக்கிறார். அவர் மனுஷகுமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார். இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள். நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை; நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன்; எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது" (யோவா.5:25-30).

என்னுடைய நண்பர்களே, இயேசுவினிடத்தில் விசுவாசம் வைப்பதன் மூலமும், உன்னுடைய பாவங்களுக்காக மனந்திரும்புவதன் மூலமும், கிறிஸ்துவிலுள்ள உன்னுடைய விசுவாசத்தை அறிக்கையிடுவதன் மூலமும், உன்னுடைய பாவமன்னிப்புக்கென்று தண்ணீரில் ஞானஸ்நானம் எடுத்துக்கொள்வதன் மூலமும் நீங்கள் அந்த மகா நாளுக்கென்று ஆயத்தமாகலாம். இவற்றை செய்வதனால், கர்த்தர் உன்னை இரட்சித்து, தம்முடைய சபையில் உன்னைச் சேர்த்துக்கொள்வார். அதன்பின் ஒரு கிறிஸ்தவனாக, நீ கர்த்தரை சேவித்து, மரணபரியந்தம் அவரிடத்தில் கொண்டுள்ள விசுவாசத்தில் நிலைத்திருந்தால், ஒரு நாள் அவர் முன் நிற்கையில், அவர் உன்னை நோக்கி, "நல்லது, உத்தமும் உண்மையும் உள்ள ஊழியக்காரனே உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்று சொல்லுவதை கேட்பாய். அது ஆச்சரியமானதாக இருக்காதா? இன்னும் சமயத்தையும் தருணத்தையும் நீ பெற்றிருக்கும்போது, அதைப் பற்றி நினைத்துப் பார். நீ அவ்வாறு செய்ய நாங்கள் ஜெபிக்கிறோம்.

**நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங்காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்? -1பேது.4:17**



# வெற்றிக்கு ஐந்து முதல்கள் - Five Firsts to Success

1. நாளின் **முதல் மணிநேரத்தைத்**
2. வாரத்தின் **முதல் நாளை**
3. வருமானத்தின் **முதல் பகுதியை**
4. ஒவ்வொரு தீர்மானத்தில் **முதல் எண்ணத்தை**
5. உன் இருதயத்தில் **முதல் இடத்தைத்**

**தேவனுக்குக் கொடு**

5 Steps For Success

*- The VOTI*

## பிறந்த நாளைக் காணும்...



இவ்விதழின் ஆசிரியர் சகோ.அர்ஜுனன் அவர்கள் 05.06.2014-ல் தமது 50-வது பிறந்த நாளை காண்கிறார். நம்முடைய கர்த்தர் ஐம்பெரும் ஊழியங்களை அவருக்குக் கொடுத்து பயன்படுத்தி வருகிறார். (வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையின் பிரசங்கியார், கிறிஸ்துவின் வசன மாதஇதழ் ஆசிரியர், கிறிஸ்துவின் வசன வானொலி நிகழ்ச்சி பேச்சாளர், கிறிஸ்துவின் வசன தொலைக்காட்சி நிகழ்ச்சி பேச்சாளர், மற்றும் World Evangelism Bible School நிர்வாகி...)

**"பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்" 3யோவான் 2**

**வாழ்த்தும் உள்ளங்கள்**
**வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையார்**

### வேத அறிவுப்போட்டி: 165 -ன் விடைகள்

1. காணிக்கைகளையும், பலிகளையும் - எபி.8:3
2. எரேமியா - எரே.17:14
3. நாவினாலே - யாக்.3:9
4. தமது கிருபையின்படி - புலம் 3:32
5. பேதுரு - 1பேது.3:13
6. எசேக்கியேல் - எசே.12:3
7. பேதுரு - 2பேது.1:14
8. தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ - தானி.1:17
9. ஆம் - 1யோ.3:23
10. யெஸ்ரயேல் - ஓசி.1:4

உத்தமமான வழியில் நடக்கிறவன் என்னைச் சேவிப்பான்
சங்கீதம் 101:6

### வேத அறிவுப்போட்டி:165-ல் வெற்றி பெற்றவர்கள்

| | |
|---|---|
| 1. Tmt. மரகதம் திரவியம் | - கோம்பை |
| 2. K. மோகன் | - குமாரபாளையம் |
| 3. G.P. ஏசையன்ராஜ் | - கோபி |
| 4. R. எமிமாள் ரவிக்குமார் | - திருநெல்வேலி |
| 5. R. யோசுவா செல்வக்குமார் | - சிவகாசி |
| 6. M. இராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 7. R. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 8. T. ராஜாத்தி | - கோம்பை |
| 9. S. லதா | - பண்ணைப்புரம் |
| 10. Ira. எதிராசன் | - சங்ககிரி |
| 11. Mrs. ருக்மணி ஜெயசீலன் | - பண்ணைப்புரம் |
| 12. P. வடிவேல் | - பாண்டமங்கலம் |
| 13. P. மார்த்தாள் | - பாண்டமங்கலம் |
| 14. V. அருனாச்சலம் | - பாண்டமங்கலம் |
| 15. D. ரூத் பிரின்ஸ் | - சானார்பாளையம் |
| 16. P. லீதியாள் சாந்த ரூபணி | - கரூர் |
| 17. J. ஜீம்சன் | - பாண்டமங்கலம் |
| 18. D. சாந்தா தேவி | - பண்ணைப்புரம் |
| 19. N. தர்நிசா | - நாமக்கல் |
| 20. V. வீரராகவன் | - கரூர் |
| 21. Mrs. சரோஜினி | - தாராபுரம் |
| 22. Sis. ராஜம்மாள் | - திருப்பூர் |
| 23. Mrs. பொன்னிவிக்டர் | - தாராபுரம் |
| 24. S. தங்கம் | - கன்னியாகுமரி |
| 25. Sis. அல்லிராணி | - சென்னை |
| 25. Ref.No 365 | |